சிறப்பு செய்தி

# பாடுகளும் பலன்களும்



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். நம்மில் யாருக்கு கஷ்டம் இல்லாத வாழ்க்கை இருக்கிறது? என்று கேட்போமானால் பதில் சொல்ல அனைவருமே தயங்குவோம். ஆண்டவர் இயேசுவும் பரிசுத்த யோவான் நற்செய்தி நூல் 16வது அதிகாரம் 33-ம் வார்த்தையில் "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" என்றே சொல்கிறார். எல்லா மனிதர்களின் வாழ்க்கையிலும் கஷ்டங்களும் துன்பங்களும் உண்டு.

## உபத்திரவம் தவிர்க்க முடியாதது

ஆண்டவர் இயேசு உபத்திரவம் நமக்கு உண்டு என யோவான் 16:33-ல் கூறுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் "தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப் படுவார்கள்" என 2தீமோத்தேயு 3:12-ல் சொல்கிறார். தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற நாம் மற்றவர்கள் செய்யும் தவறை செய்ய மாட்டோம். தவறுக்களுக்கு உடன் போகவுமாட்டோம். அதனால் தனித்து விடப்பட்ட நிலைமையும் துன்பமும் பிறர் மூலம் நமக்கு வரலாம். பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இதே பிரச்சனைகளை சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ சந்தித்தார்கள். எல்லோரும் சிலையை வணங்கினார்கள். சிலை வணக்கம் செய்யாமல் தேவ பக்தியாய் நடந்த இம்மூவரும் எரிகிற அக்கினி சூளையில் போடப்பட்டனர்.

## உபத்திரவத்தின் மத்தியில் வெற்றி தவிர்க்க முடியாதது

சங்கீதம் 34:19-ம் வார்த்தையில் அநேக கஷ்டங்களின் வழியாக நாம் போனாலும் நம் ஆண்டவர் அதில் நின்று விடுவிப்பார் என்று வேதம் கூறுகிறது. ஏழு மடங்கு சூடாக்கப்பட்ட அக்கினி சூளையில் போடப்பட்டவர்களை அக்கினியால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அக்கினியில் போடப்பட்ட மூன்று பேரின் சரீரங்களையும், அவர்களின் தலை மயிர்களையும் அவர்களுடைய சால்வைகளையும் அக்கினி

சேதப்படுத்தவில்லை.(தானியேல் 3:27). காரணம் ''அதில் நின்று விடுவிக்கிற'' நம் தேவன் நான்காவது நபராக அம்மூவரோடும் அக்கினியில் உலாவினார்.

## உபத்திரவத்தின் பலன் தவிர்க்க முடியாதது

### 1. உபத்திரவம் உருவாக்குகிறது

"கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து தாம் சேர்த்துக் கொள்கிற எந்த மகனையும் தண்டிக்கிறார்" என்று எபிரேயர் 12:6-ல் வேதம் கூறுகிறது. கஷ்டங்களை ஆண்டவர் ஏன் நம் வாழ்க்கையில் அனுமதிக் கிறார்? எபிரேயர் 12:10-ல் நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார் என்று பார்க்கிறோம். கஷ்டங்களும் சிட்சையும் நம்மை உருவாக்குகிறது. நம்மில் காணப்படும் தேவையற்ற குப்பைகளை அகற்றி நம்மை பொன்னாக மாற்றவே உபத்திரவத்தின் மத்தியில் நாம் கொண்டு போகப்படுகிறோம். பாடுகள் தேவன் விரும்புகிறவைகளை நம்மில் உருவாக்குகிறது மட்டுமல்ல தேவ கட்டளைகளையும் பிரமாணங்களையும் திட்டங்களையும் நம்மில் நிறைவேற்ற உதவுகிறது.

### 2. உபத்திரவம் நிறைவான பலனைத் தருகிறது

பரலோக ராஜ்யம் நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர் களுக்கு உரியது என ஆண்டவர் இயேசு மத்தேயு 5:10-ல் கூறுகிறார். நீதியாக வாழ்ந்தும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறோமா? உங்களுக்கு நிறைவான பலன் காத்துக் கொண்டிருக்கிறது மட்டுமல்ல பரலோக ராஜ்ஜியம் உங்களுடையது. இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல. (ரோமர்8:18). பாடுகளுக்குப் பின் மகிமை மறைத்து வைக்கப் பட்டிருக்கிறது. மகிழ்ந்திருப்போம் பாடுகளில்.

எஜமான் ஒருவர் தன் வேலைக்காரனிடம் கிணற்றிலிருந்து தண்ணீர் மொண்டு தொட்டியில் நிரப்பும்படி கூறினார். தண்ணீரை நிரப்ப அவர் கொடுத்த வாளி (BUCKET) சிறு சிறு துளைகளோடு இருந்தது. தண்ணீரெல்லாம் கீழே வீணாகி கொண்டே தொட்டியை நிரப்பிக் கொண்டிருந்தான். வாளியில் துளை இருந்ததால் தொட்டியில் தண்ணீர் நிரப்ப காலதாமதம் ஆனது. சலிப்புடன் தன்னை நொந்து கொண்ட வேலைக்காரன் கஷ்டப்பட்டு அவ்வேலையை நிறைவு செய்தான். எஜமான் ஏன்

இப்படி துளையுள்ள வாளியை கொடுத்தார் என கோபம் கொண்டான். பல நாட்கள் கழித்து தான் தண்ணீர் இரைத்த அவ்வழியே போன போது வழியின் இருபுறங்களிலும் அழகான சோலையும், வண்ணப்பூக்களும் பூத்து அவ்வழியை அழகுப் படுத்தியிருந்தது. எஜமான் தன்னை கடினமான பாதையில் நடத்தியதற்கு பின் நன்மையான காரியம் இருப்பதை உணர்ந்த வேலைக்காரன் அன்றிலிருந்து உற்சாகமாய் பாடுபட துவங்கினான்.

எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய் காணாமல் துக்கமாய் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும். (எபிரேயர் 12:11).

## ENCOUNTER – 2018

நமது வருடாந்திர வாலிபர் முகாம் ENCOUNTER – 2018 ஜீலை மாதம் 6,7&8 தேதிகளில் அழகிய எழில்மிகும் சூழலில் **Karunya Institute of Technology & Science** மத்தம்பாளையத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இம்முகாமிற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே ஆயத்தப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஜெபத்தோடு வேலைகள் நடைபெற்றது. Br. James, Br. Sam, Br. Dilton, Br. Ruban, Br.Augustin, Br. Billy, Br. John, Br. William உடன் இணைந்து YFT குழுவினரும் சிறப்பாக செயல்பட்டு ஜீலை 6-ம் நாள் மாலை **ENCOUNTER CAM** இனிதே ஆரம்பித்தது. மூன்று நாட்களும் பாடல்கள், கோரியோ கிரா.்.பி, நாடகம் மற்றும் Practical Talk ஆகியவற்றில் YFT குழுவினரின் தாலந்துகள் சிறப்பாக வெளிப்பட ஆண்டவர் உதவி செய்தார். சிறப்பு செய்தியாளரான சகோதரர் ஷாஜி ஆபிரகாம் கலந்து கொண்டு பரிசுத்தாவியானவரின் வல்லமையோடு தேவ வார்த்தைகளை பிரசங்கித்தார். செல்வின் அண்ணனையும் ரோனா அக்காவை யும் வாலிபர் மத்தியில் மகிமையாய் ஆண்டவர் பயன் படுத்தினார். பரிசுத்த ஆவியானவர் அவர்களை மறைத்து வெளிப்பட்டார். வாலிபர்கள் 320-க்கு மேலானோர் கலந்து கொண்டனர். அநேகர் தங்களை நிதானித்து உணர்ந்தவர் களாய் ஆண்டவருக்கும், பெற்றோருக்கும் கீழ்ப்படிய தங்களை அர்ப்பணித்து கடந்து சென்றனர். CAMP–ன் தேவைகளை ஆண்டவர் அற்புதமாய் சந்தித்தார். ஆண்டவருக்கே மகிமை.

பிள்ளைகள் எடுத்த தீர்மானங்களில் நிலைத்து

கிறிஸ்துவில் வளர்ந்திடவும் புதிதாய் ஆரம்பிக்கப்பட்ட ஜெபக்குழுக்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

முகாமின் இறுதி நாளில் அநேக சாட்சிகளை ஆண்டவர் எழுப்பி கொடுத்தார். சிலவற்றை இங்கு காண்போம்.

❖ This meeting gives me many valuable ideas to get success in "My own life". By this, I respect my parents and mainly. I know the "True God" Jesus so, I before all, I must respect the "God". I am a Hindu girl. But I love only the True God that is "Jesus".

❖ Very nice, useful for us especially youth I learnt more about Youth life, God, His plan for us. I really tell you that I repented from my sins and accepted the Lord Jesus Christ as my savior and life partner. Before I had my first love as some one. But from today Lord Jesus Christ is my first love forever.

## துதிப்போம்

➢ கடந்த ஜீன் மாதம் 2-ம் தேதி Leadership Training Programme நமது YFT அலுவலகத்தில் நடைபெற்றது. வாலிப பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய தலைமைத்துவத்தை பற்றி அறிந்து கொண்டு தங்களை ஆண்டவருக்கு அர்பணித்தவர்களாக தலைவர்களாக கடந்து சென்றனர்.

➢ ஜீலை 6,7&8-ம் தேதிகளில் நமது வருடாந்திர வாலிபர் முகாம் ENCOUNTER -2018 மிகச் சிறப்பாக பயனுள்ள வகையில் ஆண்டவர் நடத்தி கொடுத்ததற்காக ஆண்டவரைப் புகழ்ந்து போற்றுவோம்.


➢ ENCOUNTER CAMP-ன் பின் தொடர் சந்திப்புகளை கோவை, பழனி, காரமடை மற்றும் பெருந்துறை பகுதிகளில் சிறப்பாக நடத்தவும், ஜெப குழுக்களை ஏற்படுத்தவும் கிருபை செய்த ஆண்டவருக்கு நன்றி சொல்வோம்.

➢ ஆகஸ்டு மாதம் 22-ம் தேதி திருச்சி திருமண்டலத்தின் மூலம் நடத்தப்பட்ட வாலிபர் முகாமில் 250-க்கும் மேலானோர் தங்களை ஆண்டவருக்காக அர்ப்பணித்தற்காய் துதிப்போம். செல்வின் அண்ணன் ரோனா அக்கா மற்றும் YFT குழுவையும் ஆண்டவர் வல்லமையாய் பயன்படுத்தினார். ஸ்தோத்திரம்.

- ஆகஸ்டு மாதம் 24,25&26-ம் தேதிகளில் நடைபெற்ற திருநெல்வேலி திருமண்டலத்தின் பெண்கள் மாநாட்டில் ரோனா அக்காவையும் செல்வின் அண்ணனையும் மறைத்து ஆண்டவர் வெளிப்பட்டார். 4000-க்கும் அதிகமான பெண்கள் புது விசுவாசத்துடனும், அர்ப்பணிப்புடனும் மறுரூபமாக்கப்பட்டு கடந்து சென்றதற்காய் ஆண்டவரைத் துதித்திடுவோம்.

- செப்டம்பர் மாதம் 8-ம் தேதி YFT-ன் கோவை மண்டலத்திற்கான ஒருநாள் வாலிபர் ஒடுக்க கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 220 பேருக்கு அதிகமானோர் கலந்து கொண்டு ஆவியில் வைராக்கியமடைந்து அர்ப்பணிப்போடு சென்றதற்காய் நன்றி சொல்வோம்.

# குடும்ப பகுதி



## திருப்தியாக்கப்படாத தேவைகள்

குடும்பங்களை தேவன் வாசம் செய்யும் அலங்கங்களாய் கட்டுகிற தேவ பிள்ளைகளுக்கு ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்ற தேவன் நம்மை குடும்பமாக இணைத்திருக்கிறார். இந்த குடும்ப வாழ்வு அநுதினமும் மகிழ்ச்சியாக ஒருமனப்பாட்டுடன் இணக்கமாய் இருப்பதே தேவ சித்தம். திருமண வாழ்வில் மகிழ்ச்சியையும், ஒருமனப் பாட்டையும் கெடுக்கும் குள்ள நரிகளை நாம் கடந்த இதழிலிருந்து கண்டறிந்து கொண்டிருக்கிறோம்.நடைமுறைக்கு அப்பாற்பட்ட எதிர்ப்பார்ப்பு (Un Reasonable Realistic) என்ற தலைப்பின் கீழ் சிந்தித்தோம். இந்த இதழில், ‘‘திருப்தியாக்கப் படாத தேவைகள்’’ என்ற குள்ளநரியை இனம் கண்டு கொள்ள போகிறோம். திருமண வாழ்வில் “தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல்“ பிரதானமான ஒன்று. இந்த தேவைகள் பூர்த்தி செய்யப்படாததால் தான் குடும்பத்தில் பிரச்சனைகள் உருவாகிறது. எல்லா தேவைகளையும் மூன்று காரியங்களில் நாம் அடக்கி விடலாம். 1. உணர்வு பூர்வமான தேவைகள், 2. சரீரபிரகாரமான தேவைகள் 3. பொருளாதார தேவைகள்.

### 1. உணர்வுபூர்வமான தேவைகள்

உணர்வு பூர்வமான தேவைகளில் கணவன் மனைவியிடை யேயான அன்பு பூர்த்தியாக வேண்டும். அன்பு பூர்த்தியாவதற்கு பதிலாக அன்பு தணிந்து போய்க் கொண்டிருக்குமேயானால்

வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் நம் வாழ்க்கையில் சற்று நின்று, அமர்ந்து நேரங்களை நம் வாழ்க்கைத் துணையோடு செலவிட்டு அன்பை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அதிகமான வேலைப்பளு, துணையோடு குறைவாக நேரங்களை செலவிடுதல் போன்றவை அன்பு தணிவதற்கு மிக முக்கிய காரணங்களாக அமைகிறது. இந்த அன்பு பூர்த்தியாக விட்டால் கசப்பும் கோபமும் குடும்பத்தில் காணப்படும். ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுதலில் தவறிப்போவோம். அன்பை குறித்து சிந்திக்கும் போது வேதம் தெளிவாய் கூறுகிறது. “அன்பு சகலத்தையும் சகிக்கும் தாங்கும்” 1கொரிந்தரியர் 13:7. அன்பின் வெளிப்படையான அடையாளம் தான் ஒருவரையொருவர் மன்னித்தல், ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுதல். வாழ்க்கைத துணையை நேசிக்கிறேன் என்று சொல்லியும் கடந்த கால தவறுகளை மன்னியாமலும், மறக்காமலுமிருந்து ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளாமலும் இருப்போமானால் நம் அன்பு மாயமான அன்பே. மறப்போம், மன்னிப்போம், ஏற்றுக் கொள்வோம் என்பதே மெய் அன்பு. அன்பு திரளான பாவங்களை மூடும்.

## உ. சரீரபிரகாரமான தேவைகள்

மனைவி பெலவீனமான பாண்டம் என்றே வேதம் சொல்கிறது. சரீர பெலவீனங்கள் மற்றும் வீட்டின் அன்றாட வேலைகளினால் சோர்வுற்று இருக்கும் மனைவியின் தேவைகளை அறிந்தவர்களாய் போதுமான ஓய்வை உருவாக்கி தருவது மிகவும் இன்றியமையாதது. வீட்டில் சிறு சிறு உதவிகளை செய்து தருவதும் உற்சாகப்படுத்துவதும் கணவனின் கடமை மட்டுமல்ல, வேலைப்பளுவினால் களைப்போடு கணவன் காணப்படுவாரேயானால் அவரின் சரீர தேவைகளை அறிந்து அவருக்கு உதவவும், தொந்தரவு செய்யாமல் இருக்கவும் மனைவி அறிய வேண்டும். வீட்டின் பணிச்சுமைகளையும் அவர் மீது சுமத்தலாகாது.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரியந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் ஏழாவது அதிகாரம் நான்காவது வார்த்தையில் “மனைவி தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல புருஷனே அதிகாரி அப்படியே புருஷனும் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல மனைவியே அதற்கு அதிகாரி” என்று உரைக்கிறார். நாம் அதிகாரிகளல்ல, சரீரபிரகாரமான தேவைகளை ஒருவருக்கொருவர் பூர்த்தி செய்ய வேண்டும். இதினிமித்தம் குடும்பங்களில் அநேக பிரச்சனைகள் எழுகிறது. முக்கியமாக தாம்பத்திய வாழ்க்கையை குறித்து நாம் கவனமாக ஜாக்கிரதையாக இருப்பது மிக அவசியம்.

சுயநலமான தாம்பத்திய வாழ்க்கை, சுய மகிழ்ச்சிக்காக சுயநலமாக தாம்பத்தியத்தில் ஈடுபடுவதால் திருப்தியற்ற தன்மைகளும், கசப்புகளும் குடும்பத்தில் காணப்படுகிறது. கடந்த கால தோல்வி மனப்பான்மையும், பயமும் சரீர பிரகாரமான நிறைவை பெற முடியாததற்கு காரணிகளாக அமைகிறது. புருஷன் தன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யக்கடவன் அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள் (1கொரி 7:3).

## 3. பொருளாதார தேவைகள்

கடந்த இதழிலும் இதைக்குறித்து சிந்தித்திருக்கிறோம். நினைப்பதை எல்லாம் வாங்க வேண்டும் விளம்பரத்தில் கண்டதை வீட்டில் காண வேண்டும் என்று உலகம் ஓடிக் கொண்டிருக்க “நாம் உலகத்தாரல்ல” என்பதை நினைவிற் கொள்ள ஆண்டவர் நம்மை அழைக்கிறார். போதும் என்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் (1தீமோத்தேயு 6:6). நமது வாழ்க்கைத் துணையின் தேவைகளை கேள்விப்பட்டு அதைப்பூர்த்தி செய்வது மகிழ்ச்சி. அதைக் காட்டிலும் துணையின் தேவையை நாமே அறிந்து உணர்ந்து நிறைவு செய்து தருவது மிகுந்த மகிழ்ச்சியை இல்லறத்தில் தருகிறது.

ஈசாக்கு ரெபேக்காள் குடும்ப வாழ்வைப் பார்க்கும் போது அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது. ரெபேக்காள் பிள்ளை கொடும் என்று ஈசாக்கினிடத்தில் கேட்டாள். குடும்ப வாழ்வில் அதிருப்தியோடு இருந்த சூழலில் ஈசாக்கு தேவனை நோக்கி வேண்டுதல் செய்தான் (ஆதியாகமம் 25:21). தேவனை சார்ந்து கொண்டான். தேவன் அவன் ஜெபத்தைக் கேட்டு ரெபேக்காளை இரட்டை பிள்ளைகளினால் ஆசீர்வதித்தார்.

உணர்வு பூர்வமான, சரீரப்பிரகாரமான பொருளாதார தேவைகளை திருப்திபடுத்திட நாம் ஆண்டவரை சார்ந்து கொள்வோம். எல்லாவற்றிலும் நாம் அவரை சார்ந்து கொள்ளும் போது ஆண்டவர் வாக்கு கொடுக்கிறார்.

“என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்” பிலிப்பியர் 4:19.

“நம் வாழ்க்கைத்துணையின் தேவையை சந்திக்க நம்மைத் தவிர வேறுயாருமில்லை. அது நம் மேல் விழுந்த கடமை”.

# ஜெபியுங்கள்

## கருத்தோடும் ஊக்கத்தோடும்

மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல உள்ள தமிழகத்திற்காகவும், ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்காகவும், உரிமைகளுக்காக போராடும் தமிழக மக்களுக்காகவும், இவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காகவும், எழுப்புதலுக்காகவும், சரீரபிரகாரமான தேவைகளுக்காகவும் திறப்பின் வாசலில் நிற்க நம்மை ஆண்டவர் அழைக்கிறார்.

- நிலையான அரசு அமையவும், ஸ்திரதன்மையோடு அரசு செயல்படவும் ஜெபிப்போம்.
- ஊழல், இலஞ்சம், சுரண்டல் மற்றும் வறுமை இல்லாத தமிழகத்திற்காய் ஜெபிப்போம்.
- தமிழகத்தின் எழுப்புதலுக்காகவும், ஜனங்களின் மனக்கண்கள் திறக்கப்படவும் ஜெபிப்போம்.
- தமிழக திருச்சபைகளுக்காகவும், ஊழிய ஸ்தாபனங்களுக்காகவும், ஊழியர்களை ஆண்டவர் அக்கினி ஜீவாலையாக மாற்றவும் ஊக்கமாய் ஜெபிப்போம்.

## YFT ஊழியங்களுக்காய் ஜெபியுங்கள்

- அக்டோபர் மாதம் 19, 20 & 21-ம் தேதிகளில் தம்பதிகளுக்காக நடத்தப்படும் YFF Family Camp-2018 முகாமில் தேவன் தெரிந்து கொண்ட குடும்பங்கள் பங்கேற்கவும், குடும்பங்கள் கிறிஸ்தவ கோட்பாடுகளில் கட்டப்படவும், Camp-ன் ஆயத்தங்களுக்காகவும் மற்றும் பொருளாதார தேவைகளுக்காகவும் ஜெபித்துக் கொள்வோம்.
- பள்ளி, கல்லூரி, விடுதிகள், திருச்சபைகள் மற்றும் இதர இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் YFT ஊழியங்களில் ஆண்டவர் பெரிய காரியங்களை செய்யவும், சீஷர்களின் தொகை பெருகவும், கோவைப் பட்டணம் கிறிஸ்துவுக்கு சொந்தமாகவும் போராடி ஜெபிப்போம்.
- பல்கலைகழக தேர்வுகள் எழுதும் பிள்ளைகளின் Preparation & Presentation-க்காகவும் மாணவர்களின் நல்ல உடல்நிலை மற்றும் மனநிலைகளுக்காக ஜெபிப்போம்.
- YFT ஊழியங்களுக்காக நல்ல ஒரு CAMPSITE வாங்குவதற்காய் ஜெபிப்போம்.

- நம் ஊழியத்தின் மாதந்திர தேவைகள் ரூ 1,00,000/- சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- திருச்சி தஞ்சாவூர் திருமண்டலத்தின் வாலிபர் முகாமிற்காக ஜெபிப்போம்.
- அண்ணன் அக்காவின் நல்ல ஆரோக்கியமான உடல் நிலைக்காகவும் மற்றும் தேவன் அவர்களை ஆட்கொண்டு நடத்தவும் ஜெபிப்போம்.
- தேவன் தந்திருக்கும் தரிசனமான (RTA) சிறப்பாக செயல்படுத்தப்பட ஜெபிப்போம்.

# வேதாகம புதிர் (PUZZLE)

**வேதப்பகுதி : எபிரேயர் முழுவதும்**

**வலமிருந்து இடம்**

1. நாடோறும் ஒருவருக்கொருவர் ____________________ சொல்லுங்கள் .
2. நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாய் இருப்பது எது?
3. கர்த்தர் எந்த கோத்திரத்தில் தோன்றினார்?

**இடமிருந்து வலம்**

4. விசேஷித்த நன்மையானதொன்றை நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தவர் யார்?

**மேலிருந்து கீழ்**

5. அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு எதைச் செய்ய வல்லமையுள்ளவராய் இருக்கிறார்?
6. மரணத்தை ருசிபார்க்கும்படி தேவ தூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டவர் யார்?
7. காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்பு பெற்றவர் யார்?
8. எது ஸ்திரப்படுகிறது நல்லது?

**கீழிருந்து மேல்**

9. சாலேம் என்பதின் அர்த்தம் என்ன?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | 8 |
| | | 4 | | | |
| 5 | 6 | 3 | | | |
| | | 7 | | | |
| 2 | | | 9 | | |




**சரியான பதில் அனுப்பும்
முதல் பத்து நபர்களுக்கு
பரிசுகள் காத்திருக்கிறது!!**

# Young Family Fellowship

*invites you for the*

**HOME BUILDERS CAMP 2018**

Join us with your Family



**Date :**
**19th 6.30 pm &**
**21st 4.30 pm**

**Venue :**
**RAVEL CATHOLIC RETREAT CENTER**
Ravel Matriculation School Seerapalayam, Malumichampatti, Coimbatore.

I and the children whom the LORD has given me are a sign and a wonder in Israel ISA 8:18

**36, Grey Town, Coimbatore-18 Web: youngfishersteam.com**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே!

தேவன் தன்னுடைய நோக்கத்தையும், அவர் மனதின் ஏக்கத்தையும் நமக்கு திட்டமாக தந்திருக்கிறார் (மத்தேயு 28:18). அதை நிறைவேற்ற கூடிய மக்களையும்(People), பரிசுத்தாவியின் வல்லமையையும் (Power) தந்திருக்கிறார். இவ்விரண்டும் இல்லாமல் தேவனுடைய திட்டத்தை (Purpose) நிறைவேற்ற முடியாது. நீங்களே அந்த நபர். இணைந்து செயல்படுதல் தேவனுடைய குணாதிசயத்தை வெளிப்படுத்துகிறது.

இணைவோம்! செயல்படுவோம்!! தேவ திட்டத்தை. நிறைவேற்றுவோம்!!!

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்,
இன்றைய வாலிபர்களுக்காக,
செல்வின் அண்ணன், ரோனா அக்கா.